අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# கர்நாடக சங்கீதம்

## வினாத்தாள் I & II



The National e-learning Portal for The General Education

Nenasa

தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு** | 42 | T | I, II

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

| | |
|---|---|
| **கர்நாடக சங்கீதம்** | நேரம் : 3 மணித்தியாலம் |
| **மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்** | வினாக்களை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக. |

### கர்நாடக சங்கீதம்

**அறிவுறுத்தல்கள்**

* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

## பகுதி – I

1. “மானினேர்விழி…..” என்ற தேவாரம் பாடப்பட்ட பண்
   1. சாதாரி 2. பழம்பஞ்சுரம் 3. கொல்லி 4. நட்டபாடை

2. மொத்த அட்சர எண்ணிக்கை 29 ஆகவுள்ள தாளம்
   1. சங்கீரணஜாதி துருவதாளம் 2. சங்கீர்ணஜாதி அடதாளம்
   3. சங்கீர்ணஜாதி மட்டியதாளம் 4. கண்டஜாதி துருவதாளம்

3. 72 மேளகர்த்தாச் சக்கரத்தில் சுத்தமத்திம மேள ராகங்களைக் கொண்ட சக்கரம்
   1. திசி 2. ருத்ர 3. ஆதித்ய 4. நேத்ர

4. சுருதியும் கூட ஒலிப்பதற்கு வசதியுள்ள வாத்தியம் என்பதனால் வீணை ஒரு
   1. பகுத்வனிவாத்தியம் 2. சகலவாத்தியம்
   3. ஏகத்வனிவாத்தியம் 4. நிஷ்கள வாத்தியம்

5. வேத-பூ என்ற சங்கேதக் குறியீட்டை உடைய ராகம்
   1. சங்கராபரணம் 2. கல்யாணி 3. கரகரப்பிரியா 4. தோடி

6. நவரோஜ் ஒரு
   1. பஞ்சமதாந்தியராகம் 2. நிஷாதாந்தியராகம்
   3. தைவதாந்தியராகம் 4. ஸ்வராந்தரராகம்

7. கனம் என்னும் மார்க்கத்தைச் சாதித்துக் காட்டியவர்
   1. கனம் கிருஷ்ணய்யர் 2. பொப்பிலி கேசவய்யா
   3. ராமாமாத்தையர் 4. வெங்கடமகி

8. புல்லாங்குழலில் மிக உயர்ந்த சுருதியை உண்டாக்கும் துளை
   1. ஊதும்துளை 2. முகரந்திரம் 3. மூடியதுளை 4. தாரரந்திரம்

9. பகிர்சிருங்காரம், அந்தர்பக்தி என்ற இரட்டைத்தார்ப்பரியத்துடன் விளங்கும் உருப்படி
   1. கீர்த்தனை 2. பதம் 3. இராகமாலிகை 4. வர்ணம்

10. திஸ்ரஜாதி துருவ தாளத்தின் மொத்த அட்சர எண்ணிக்கையை உடைய வேறு தாளம்
   1. மிஸ்ரஜாதி திரிபுடைதாளம் 2. மிஸ்ரஜாதி அடதாளம்
   3. மிஸ்ரஜாதி ரூபகதாளம் 4. மிஸ்ரஜாதி மட்டியதாளம்

11. அரசனைப் புகழ்ந்து பாடமறுத்து தியாகராஜசுவாமிகள் பாடிய கிருதி
   1. “தொரகுணா இடுவண்டி....” 2. “நன்னுபாலிம்ப....”
   3. “நிதிசால சுகமா......” 4. “பாலகனகமய......”

12. தோஷநிவாரணியாக கச்சேரிகளின் இறுதியில் பாடப்படும் இராகம்
   1. கல்யாணி 2. மத்தியமாவதி 3. ஆரபி 4. தோடி

13. மல்லாரி இசையை வாசிப்பதற்கு சிறந்த வாத்தியம்
   1. புல்லாங்குழல் 2. வயலின் 3. தவில் 4. நாதஸ்வரம்

14. உபபல்லவி, எத்துக்கடைப்பல்லவி என அழைக்கப்படும் வர்ணத்தின் அங்கம்
   1. பல்லவி 2. அனுபல்லவி 3. சரணம் 4. சிட்டைஸ்வரம்

15. பின்வருவனவற்றுள் மேலைத்தேச வாத்தியங்களை உள்ளடக்கிய தொகுதி
   1. கிற்றார், பியானோ, ஓர்கன் 2. வயலின், வீணை, புல்லாங்குழல்
   3. கிற்றார், வீணை, வயலின் 4. வீணை, பியானோ, ஓர்கன்

16. பாணச் சக்கரத்தில் வரும் ரிஷப, காந்தாரம் முறையே
   1. சதுஸ்ருதிரிஷபம், சாதாரணகாந்தாரம் 2. சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம்
   3. சுத்தரிஷபம், சாதாரணகாந்தாரம் 4. சதுஸ்ருதிரிஷபம், சுத்தகாந்தாரம்

17. ஸரிமபதஸ் - ஸ்நிதபமகரிஸ என்ற ஆரோகண அவரோகணத்தை உடைய இராகம்
   1. ஹம்சத்வனி 2. பிலஹரி 3. ஆரபி 4. மோகன்

18. திஸ்ரசாபு தாளத்தில் பாடப்படும் உருப்படி
   1. “சின்னஞ்சிறுகிளியே....” 2. “மானினேர்விழி...”
   3. “ஏறுமயிலேறிவிளை......” 4. “இனிநமக்கொரு....”

19. “வள்ளுவன் மறையும்....” என்ற சரணத்தையுடைய கீர்த்தனை பாடப்படும் இராகம்
   1. ஹம்சத்வனி 2. பிலஹரி 3. கல்யாணி 4. பந்துவராளி

20. பஜனைப் பத்ததியின் தந்தை
   1. கோபாலகிருஷ்ணபாரதியார் 2. அன்னமாச்சாரியார்
   3. தாளப்பாக்கம் சின்னையா 4. அருணகிரிநாதர்

21. பின்வருவனவற்றுள் பொதுப்பண்
   1. நட்டபாடை 2. செந்துருத்தி 3. கொல்லி 4. புறநீர்மை

22. சந்த அமைப்புடன் பாடப்படும் பாடல்வகை
   1. வெண்பா 2. திருப்புராணம் 3. தேவாரம் 4. திருப்புகழ்

23. கரிகாம்போதி ராகத்தின் ரிஷப மூர்ச்சனையில் தோன்றும் இராகம்
   1. கல்யாணி 2. கரகரப்பிரியா 3. நடபைரவி 4. சங்கராபரணம்

24. “இனிநமக்கொரு...” என்ற கீர்த்தனையை இயற்றியவர்
   1. மாயூரம் வேதநாயகம்பிள்ளை 2. பாபநாசம்சிவன்
   3. தண்டபாணிதேசிகர் 4. நீலா ராமமூர்த்தி

25. ஸரிகுமிபதிநு எனும் ஸ்வரசங்கேதத்தினை உடைய இராகம்
   1. கரகரப்பிரியா 2. கல்யாணி 3. பந்துவராளி 4. சங்கராபரணம்

26. இராமநாடகக் கீர்த்தனைகளை இயற்றியவர்

1. அருணகிரிநாதர் 2. கோபாலகிருஷ்ணபாரதியார்
3. பாபநாசம்சிவன் 4. அருணாசலக்கவிராயர்

27. ஒரு அலங்காரத்தை இரண்டாம் காலத்தில் பாடும் போது எடுத்துக் கொள்ளும் ஆவர்த்தனங்கள்

1. 2 1/2 2. 5 3. 10 4. 20

28. மகுடஸ்வரத்துடன் முடிக்கப்படும் உருப்படி வகை

1. கீர்த்தனை 2. இராகமாலிகை 3. வர்ணம் 4. பதம்

29. நாதஸ்வரத்திற்கான சுருதிவாத்தியம்

1. ஒத்து 2. சுருதிப்பெட்டி 3. தம்புரா 4. தவில்

30. "ஸ்வரார்ணவமு" என்ற இசைநூலை தியாகராஜசுவாமிகளுக்கு கொடுத்தவர்

1. ராமர் 2. மதங்கர் 3. சரபோஜிமன்னர் 4. நாரதர்

31. தசவித கமகங்களையும் வெளிப்படுத்தும் வர்ணம்

1. "விரிபோணி........" 2. "நின்னுகோரி ......" 3. ஸரஸூடா......" 4. "ஸ்வாமி உன்னை...."

32. முத்துத்தாண்டவர் முதன்முதலில் பாடிய "பூலோக கைலாச...." என்ற பாடலின் இராகம், தாளம் முறையே

1. வசந்தா – ஆதி 2. சூர்யகாந்தம் - மிஸ்ரஜம்பை
3. பவப்பிரியா - மிஸ்ரஜம்பை 4. காம்போதி - ரூபகம்

33. ஆதிதாள வர்ணத்தில் ஒரு ஆவர்த்தனம் எடுத்துக்கொள்ளும் அட்சரங்களின் எண்ணிக்கை

1. 16 2. 32 3. 36 4. 56

34. இந்திய சங்கீதத்திலுள்ள பல தாளங்கள் அழிந்து போகாமல் பாதுகாத்தவர்

1. திருஞானசம்பந்தர் 2. புரந்தரதாசர் 3. மாணிக்கவாசகர் 4. அருணகிரிநாதர்

35. ஸா ; நீதபதநீ, தபமா ; என்னும் ஸ்வரசஞ்சாரத்தின் மொத்த அட்சரங்களின் எண்ணிக்கை

1. 16 2. 18 3. 20 4. 22

36. கர்நாடக இசைக்கச்சேரியில் பயன்படுத்தப்படும் பிரதான தாள வாத்தியம்

1. தவில் 2. மிருதங்கம் 3. வயலின் 4. தபேலா

37. பின்வருவனவற்றுள் சுத்தாங்கமாகப் பாடப்படுவது

1. திருப்புகழ் 2. கீர்த்தனை 3. பெரியபுராணம் 4. தேவாரம்

38. "ரேவதி ராகம்..." என்ற இலட்சண கீதத்தை இயற்றியவர்

1. சுப்பிரமணியபாரதியார் 2. டைகர் வரதாச்சாரியார்
3. பெரியசாமிதூரன் 4. பொன் ஸ்ரீ வாமதேவன்

39. கனபஞ்சக ராகங்களில் ஒன்று

1. மோகனம் 2. ஆரபி 3. பிலஹரி 4. ஹம்சத்வனி

40. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக

A. இது ஒரு ஸ்திரவாத்தியம்.
B. நான்கு ஸ்தாயிகள் வரை வாசிக்கக் கூடிய வாத்தியம்.
C. மிகத்துரித காலங்களில் வாசிக்க இயலாத வாத்தியம்.
D. வில் போட்டு வாசிக்கப்படும் வாத்தியம்.
E. T.N.கிருஷ்ணன் இவ்வாத்தியத்தை வாசித்துப் பிரபல்யம் அடைந்தார்.

மேற்கூறப்பட்ட கூற்றுக்களுள் வயலின் வாத்தியம் பற்றிய சரியான கூற்றுக்கள்

ABC 2. ADE 3. BDE 4. CDE

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

**கல்வி அமைச்சு**

| 42 | T | I, II |
|---|---|---|

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

| **கர்நாடக சங்கீதம் II** | நேரம் : 3 மணித்தியாலம் |
|---|---|

## கர்நாடக சங்கீதம் II

**அறிவுறுத்தல்கள்**

- முதலாம் வினாவையும் ஏனைய நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01 i. ஹிந்துஸ்தானி இசையில் "யமன்தாட்" என அழைக்கப்படும் இராகம் எது?

ii. புரந்தாரதாசரின் முத்திரை யாது?

iii. விவாதி தோஷமற்ற மேள இராகங்கள் எத்தனை?

iv. வெண்டயம் எனும் பாகம் காணப்படும் வாத்தியம் எது?

v. + இக்குறியீடு குறிக்கும் தாளத்தின் அங்கம் எது?

vi. கும்மி, கோலாட்டம் என்பன அழியாது புத்துயிர் அளித்த வாக்கேயகாரர் யார்?

vii. பண்டைய இசையில் இராககதம்பம் என அழைக்கப்பட்ட உருப்படி எது?

viii. "அன்னமே…" என்ற வர்ணத்தின் சரணத்தின் ஆரம்ப வரியை எழுதுக.

ix. மகேந்திரவர்மனுக்கு கிடைத்த விருதுகள் **இரண்டு** தருக.

x. வர்ணத்தின் **இரண்டு** பிரிவுகளையும் தருக.

02. பின்வரும் இராகங்களில் **ஒன்றுக்கு** விரிவான இலட்சணம் எழுதுக. (உருப்படி, சஞ்சாரம் என்பன உள்ளடக்கப்படல் வேண்டும்)

i. கல்யாணி

ii. ஆரபி

iii. பந்துவராளி

03. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பற்றி விரிவான விளக்கம் தருக.

i. க்ரஹம்

ii. ஜன்னியராகம்

iii. பல்லியம்

04. i. புல்லாங்குழல் வாத்தியத்தின் படம் வரைந்து பாகங்களைப் பெயரிடுக.

ii. இவ்வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.

iii. இவ்வாத்தியத்தினை வாசிக்கும் முறையினை விளக்குக.

iv. இவ்வாத்தியத்தினை வாசித்து பிரபல்யமடைந்த வித்துவான்கள் **இருவரின்** பெயர்களைத் தருக.

05. முத்துஸ்வாமி தீட்சிதரின் வாழ்க்கை வரலாற்றினையும் இசைப்பணிகளையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.

i. பிறந்த இடம்

ii. வாழ்க்கைக் காலம்

iii. இளமைக்காலம்

iv. இவர் இயற்றிய உருப்படிகள் இரண்டு

v. இவர் நிகழ்த்திய அற்புதங்கள் இரண்டு

vi. இவரது சிஷ்யர்கள் இருவர்

vii. இவரது முத்திரை

06. நீர் கற்ற ஆதிதாள வர்ணம் ஒன்றின் பூர்வாங்கப் பகுதியை ஸ்வரதாள அங்க அடையாளங்களுடன் எழுதுக. (இராகம், தாளம், ஆரோகண, அவரோகணம், மேளஎண், ஜன்னியராகம் எனின் தாய்ராக மேளஎண், இயற்றியவர் பெயர் என்பவை குறிப்பிடப்படல் வேண்டும்)

7. i. தற்காலத்தில் வழக்கிலுள்ள பண்கள் எத்தனை?

ii. பின்வரும் இராகங்களுக்கு ஒப்பான பண்களைத் தருக.

- மாயாமாளவகௌளை
- சங்கராபரணம்
- கரிகாம்போதி
- பந்துவராளி
- பூபாளம்
- ஆரபி
- கம்பீரநாட்டை
- மத்தியமாவதி

iii. பண்வகைகளைக் குறிப்பிடுக. ஒவ்வொன்றுக்கும் இரண்டு உதாரணம் தருக.

அல்லது

இந்தியாவில் கர்நாடக இசை வரலாற்றில் 14ம்,15ம் நூற்றாண்டுகளின் கலாசாரப் பின்னணி பற்றி ஆராய்க.